அசல் வழக்கு – 28/2017
நாள் : 13.02.2025
வா.சா. : 1
பெயர் : காந்தி, த/பெ. குமாரசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

5 லட்சம் ரூபாய் காசோலை மாலதி பெயரில் கொடுக்கப்பட்டு அதனை என் வங்கி கணக்கில் செலுத்தி நான் (வாதி) பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மாலதி அந்த காசோலையின் பின்புறத்தில் அவரது கையெழுத்தை போட்டு அவரே அந்த தொகையை எடுத்து கொண்டார். மாலதி பெயரில் கொடுத்த காசோலையை என் பெயரில் போட முடியாது. அந்த பணத்தை அவர் எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. நானும் மாலதியும் ஏற்படுத்தி கொண்ட கிரய ஒப்பந்தத்தில் பாரா 4ல் நேரில் அட்வான்ஸ் பெற்றுக்கொண்டதன் விவரம் என்று குறிப்பிட்டு ரொக்கமாக 5 லட்சமும் காசோலை மூலம் 5 லட்சமும் மாலதி பெற்றுக்கொண்டதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மாலதிக்கு காசோலை கொடுத்து 11 மாதங்கள் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அப்போது மாலதி 5 லட்சம் காசோலை மூலம் பெற்றுக்கொண்டதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மாலதியுடன் போட்ட கிரய ஒப்பந்தத்தில் 5 வது பாராவில் பாக்கியுள்ள கிரய உடன்படிக்கை தொகை 14 லட்சம் மட்டும் தரவேண்டும் என்று சொல்லியுள்ளேனே தவிர மைனர் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்றால் சரி. கிரய ஒப்பந்தத்தில் 6 வது பாராவில் இதில் கண்ட காலக்கெடு மூன்று மாதங்கள் என்பது இதில் கண்ட ஷரத்துகளிலேயே ஒரு முக்கியமான அம்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. மாலதியிடமிருந்து சொத்தை கிரயம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே செயல் பட்டுள்ளேன்

என்றாலும் மைனரை பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் மாலதி மைனரை காட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டார். கோர்டில் ஆர்டர் வாங்கி விட்டதாக சொல்லிவிட்டார். அதனால் காட்டவில்லை. கிரய ஒப்பந்தத்தில் பாரா 8ல் சொத்தின் அனுபோகமும் வசமும் மாலதி வசம் இருந்து வருகிறது என்றும் 1ம் நபரின் வசம் விடப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் பணம் கொடுத்தவுடன் சொத்தின் வசத்தை என்னிடம் கொடுத்துவிட்டார். சொத்து என்னுடைய அனுபோகத்தில் உள்ளது. கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கன்டிசன்களில் கூட இளவர் நலன் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. வருவாய் துறை ஆவணங்களில் மைனர் பெயரில் தான் சொத்துக்கள் உள்ளது என்றாலும் மேற்படி விவரத்தை கிரய ஒப்பந்தத்தில் காட்டவில்லை என்றால் சரி. என் வழக்கறிஞர் அறிவுரைப்படி அதை காட்டவில்லை. மைனர் பெயரில் உள்ள வருவாய் கணக்கு ஆவணங்களை வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. கிரய ஒப்பந்தத்திற்கு முன்பு மைனர் பெயரில் அவர் பாட்டனார் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அனைத்து ஒரிஜினல் பத்திரங்களும் என்னிடம் தான் உள்ளது. வாசாஆ -4 ஆவணத்தில் 3 வது பாராவில் அந்த பத்திரத்தில் கண்ட சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளதாகவும் கார்டியன் என்ற முறையில் அடமானமோ, விற்பனையோ போன்ற எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் பராமரித்து மேஜரானவுடன் அவர் வசம் ஒப்படைக்கவேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரி. மைனர் சொத்தை மாலதி விற்பதற்கு கோர்டில் ஆர்டர் போட்டுள்ளார்கள். 15.04.2016 அன்று பதிவு செய்யப்படாத கிரய

K. Gandhi

ஒப்பந்தம் மாலதியிடம் போட்டிருக்கிறேன் என்றால் சரி. அதன் அசல் பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரி. அந்த கிரய ஒப்பந்த பத்திரத்தில் 4 பேரிடம் சாட்சி கையெழுத்து வாங்கியுள்ளேன் என்றால் சரி. அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். ஜெகதகுரு (இறந்துவிட்டார்) கிருஷ்ணமூர்த்தி, சீனிவாசன், ராமச்சந்திரன் ஆகியோர். அந்த பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்த பத்திரத்தில் கிரய தொகை 73 லட்சம் என்றும் அதில் 2 லட்சம் அட்வான்ஸ் தொகை கொடுப்பதாகவும் மீதமுள்ள 71 லட்சம் கொடுக்க வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது தயாரிக்கப்பட்ட ஆவணம். கார்டியன் OP போட்டபிறகு இந்த பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் GOP ல் ஆர்டர் வந்தபிறகு தான் பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தத்தில் கார்டியன் OP யில் மைனருக்காக உத்தரவு 3 மாத காலகட்டத்திற்குள் பெற்றுதரமுடியாவிட்டால் கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் தொகை இரண்டு லட்சத்திற்கு மேற்கொண்டு இரண்டு லட்சம் சேர்த்து 4 லட்சமாக தரவேண்டும் என்று எழுதி உள்ளது என்றால் தவறு.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

K. Gandhi

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/2/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

13/2/25